மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) வாரத்துக்கு 48 மணி நேர வேலை என்கிற தற்போதைய அளவை வாரத்துக்கு 45 மணி நேரமாகக் குறைக்கும் கருத்து பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது வேலை நேரத்தைக் குறைப்பதற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது அமுலுக்கு வரும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அது பற்றி தேசிய தொழிலாளர் நல ஆணைக்குழு பரிசீலனை செய்து வருகிறது. ஆனால் ஒரே சமயத்தில் 40 மணியாகக் குறைப்பதற்கு சாத்தியமில்லை. முதலில் 45 மணி என்றும், பின்னர் 40 மணி என்றும் குறைக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதுவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்த முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்குப் பல நாடுகளில் தொழிலாளிகள் 6 நாள் வேலை செய்வது என்பதற்குப் பதிலாக 5 நாள் வேலை செய்து, 40 மணி நேரமும், அதற்குக் குறைவாகவும் வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருப்பது போல், இந்த 45 மணிநேரம் வேலை குறைப்பு என்று சொல்லப்படுகிறது, அது மாதிரி வேலை நாட்களும் குறைக்கும் குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அதை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது, கனம் உறுப்பினரவர்களின் யோசனை நினைவில் கொள்ளப்படும்.

Sudanthiram Transport in Madurai

* 383 *Q.*—THIRU K. T. K. THANGAMANI,
THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the workers of Sudanthiram Transport, Madurai have been on strike for more than two months; and

(*b*) the steps taken to bring it to a successful conclusion?

[1972 மார்ச் 9

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) மதுரையிலுள்ள சுதந்திரம் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 30—9—1971 முதல் வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) 22—11—1971-ல் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டு, வேலைநிறுத்தம் கைவிடப் பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்த சிறிய பஸ் கம்பெனியிலே பணியாற்றும் தொழிலாளர்கள் 100-க்கும் கம்மியாக இருக் கிறார்கள். அப்படியிருக்கிறபோது அந்தத் தொழில் தகராறு இரண்டு மாதங்கள் நீடித்து இருந்ததற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதற்குக் காரணம் தொழிலதிபர்களிடத்தில் சரியான மனமாற்றம் இல்லாதது தான்.

திரு. கே. கந்தசாமி: உதவித் தலைவரவர்களே, சுதந்திரம் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் இரண்டு மாதங்களுக்கு மேல் தொழில் இழந்து இருந்ததால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தும், அதற்குரிய பலனை இன்னும் அடையாத நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்கள் குடும்பங்கள் தெருவில் அல்லலுறும் நிலையில் இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு அரசு ஏதேனும் பொருத்தமான திட்டம் வகுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பொருத்தமான யோசனை கூறினால் அதை நாம் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, வேலை இழந்து இருக் கிற தொழிலாளர்களுக்கு சேமிப்பு நிதியிலிருந்து, சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் நிதியிலிருந்து ரூ. 4,000 (அ) ரூ. 5,000 வரை வரும் என்று கூறப்படுகிறது. அதை ஸ்தாபனக்காரர்களும், அரசுத்துறையும் சேர்ந்து தர வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படியிருக்குமானால், அரசு உடனே தலையிட்டு அவர்களுக்கு உதவ முன்வருமா? அதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நடைமுறைக்குக் கொண்டுவர சாத்தியக் கூறு இருந்தால் அதற்கேற்ப செய்ய அரசு முன்வரும்.